Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 28 Pages 4 Sunday, 31 August 2008 Free Copy



புத்தளம் மாவட்ட நிவாரண மீள் குடியேற்ற ஒருங்கிணைப்புக் கூட்டம் இடம்பெயர் மக்களின் இன்னல்களைத் தீர்க்குமா?

புத்தளம் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி உள்ளூர் அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து புத்தளம் மாவட்ட நிவாரண மீள் குடியேற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தினை நடத்தி வருகின்றனர். கடந்த ஜூலை 30 ஆம் திகதி புத்தளம் மாவட்டத்தில் உள்ள வடக்கிலிருந்து

இடம்பெயர்ந்தவர்களுக்கான செயலகத்தில் உள்ளூர் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை சேர்ந்தவர்கள் இணைந்து கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த கலந்துரையாடல் தொடர்பாக புத்தளம் மாவட்ட பிரதான்திய ஆளுனர் லீயாவூடன் அவர்களைக் கேட்டபோது, இடம் பெயர்ந்துள்ள அனைத்து மக்களுக்கும் உதவிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறான கூட்டங்களை ஏற்படுத்தி அதன்மூலம் அவர்களது குறைகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்களை ஆலோசித்து வருவதாகத் தெரிவித்தார்.

இக்கூட்டம் புத்தளம் மாவட்ட நிவாரண மீள்குடியேற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் இரண்டாவது கலந்துரையாடலாகும். இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுத்தல், அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்தல், அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிகள் போன்றவற்றை ஏனைய நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்துதல் போன்ற வற்றை மேற்கொண்டு வருகின்றனர். மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண



புத்தளம் சுஃப்பா மறுவா இடம்பெயர்ந்தோர் முகாம்.

அமைச்சும், UNHCR நிறுவனமும் இணைந்து இந்த கூட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இந்த கூட்டத்தின் மூலம் கிடைக்கின்ற நன்மைகள் குறித்து முந்தல் பிரதேச செயலாளர் எம்.ஆர்.எம்.மலீக் தெரிவிக்கையில், உண்மையில் மக்கள் தமது பிரச்சினைகளை பேசுவதற்கு நாங்கள் ஒரு வாய்ப்பை ஏற் படுத்தி வருகிறோம். மக்கள் தமது பிரச்சினைகளை பேசும் போதுதான் அதற்கு தீர்வு கிடைக்கும். எனவே இது பயனுள்ள ஒரு வேலைத்திட்டமாகும். இதன் மூலம் பிரச்சினைகள் தீரும் என்று நம்புகிறோம் எனக் கூறினார்.

புத்தளம் மாவட்டத்தில் மொத்தமாக 141 நலன் புரி நிலையங்கள் உள்ளன. இவற்றுள் 18,545 குடும்பங்கள் உள்ளடங்குகின்றன. இருப்பினும் 20 அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டுமே இங்கு செயற்படுகின்றன. இதனால் உதவிகள் சமநிலை காணப்படாமல் இருப்பதாக லியாவூடன் கருத்து வெளியிட்டுள்ளார்.

திடீர் என்று வெளியில் இருந்து வருகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒருசில அகதி முகாம்களுக்கு சென்று உதவிகளை வழங்குகின்றார்கள் இதனால் உதவி பெறக் கூடியவர்கள் தொடந்து உதவிகளை பெறுகிறார்கள். ஒரு சில உதவி பெறாத மக்கள் தொடர்ந்து உதவி பெறாமலே இருக்கின்றார்கள்.

புத்தளம் மாவட்டத்தில் வைத்தியர்களுக்கான ஆளணி பற்றாக்குறை காணப்படுவதால் அதற்கான தீர்வும் இந்த கலந்துரையாடலின் மூலம் எடுக்கப்பட்டுள்ளதாக லியாவூடன் குறிப்பிட்டார். சுகாதார அமைச்சினால் வைத்தியர்கள் வேலைக்கு அமர்த்தப் படுவது குறைவாக இருக்கின்ற காரணத்தினால் மன்னார் மாவட்டத்தில் இருந்து மூன்று வைத்தியர்கள் மிக விரைவில் இங்கு வந்து சேவையாற்ற இருக்கின்றார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு எந்தவகையில் உதவியளிக்கின்றது என்பது பற்றி உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான மனித உரிமை மனித வள அபிவிருத்திக்கான அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தர் முகமது ஹனிபா சர்மிளா அவர்களை வினவியபோது, புத்தளம் மாவட்டத்தில் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள்.

அரசசார்பற்ற நிறுவனங்களும் அதிகமாக இடம்பெர்ந்த மக்களுடன் வேலை செய் கின்றார்கள்.

இதனால் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை இந்த கலந்துரையாடலில் கதைக்கும் போது தீர்வினை பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் ஒவ்வொரு அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரச்சினைகளை அறியக்கூடியதாகவும் இருக்கின்றது என்றார்.

அதிகமான முஸ்லிம் மக்கள் இடம் பெயர்ந்து வாழும் புத்தளம் மாவட்டத்தில் உள்ளூர் அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து இப்படியான கலந்துரையாடலில் ஈடுபடுவதால் இடம் பெயர்ந்த மக்களின் உண்மையான பிரச்சினைகள் வெளிக்கொணரப்படும். அத்துடன் எதிர்காலத்தில் அனைத்து மக்களும் நன்மை பெறக் கூடியதாக அமையும்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநுர எப்.எம். ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத் தளத்திலும் கேட்கலாம்.

சுருக்கம்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப் படையில் திரட்டப்பட்ட IASC 140ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 65,379 குடும்பங்களைச் சேர்ந்த 239,541 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ யாழ்குடா நாட்டில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இத்தடை காரணமாக 1700க்கும் அதிகமான மீனவக்குடும்பங்கள் பாதிப் படைந்துள்ளன. பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள இந்த மீனவக் குடும்பங்களுக்கு மாற்றீடாக புங்குடு தீவு, அல்லைப்பிட்டி சந்தி, ஊர்காவற்றுறையின் கண்ணகியம்மன் இறங்குதுறை மற்றும் வேலணை பகுதிகளிலும் வடமராட்சி கிழக்கின் மணற்காடு கடற் பகுதிகளிலும் மீன்பிடிக்க அனுமதி வழங்கலாமா என ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. காங்கேசன் துறை உயர் பாதுகாப்பு வலயத்தில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்கு மான மக்கள் குழு பிரதிநிதிகளுக்கும் இராணுவத் தலைமைக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின் போது இவ்விடயம் குறித்து கலந்தாலோசிக்கப் பட்டது.

✱ மடு கல்வி வலயத்தில் 7500 பாடசாலை மாணவர்களும் வவுனியா வடக்கு பிரதேசத்தில் 4500 மாணவர்களும் அண்மைக்காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு தங்கள் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத சூழ் நிலைக்குள் தள்ளப்பட்டிருப்பதாக UNICEF நிறுவனம் தெரிவித்திருக்கின்றது. கிளிநொச்சி மாவட்ட செயலக தகவல்களின்படி புதிதாக 3100 குடும்பங் களைச் சேர்ந்த 11800 பேர் இடம்பெயர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

✱ புத்தளம் மாவட்ட அகதி முகாம்களில் வாழும் மக்களின் 2008ஆம் ஆண்டிற்கான வாக்காளர்பட்டியல் மீளாய்வு செய்வது தொடர்பான கிராம அதிகாரிகளுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளதாகவும், அகதி முகாம்களில் தற்காலிகமாக வசிக்கும் இந்த வாக்காளர்களின் முன்னர் வசித்த மாவட்டங்களிலேயே இந்தப் பதிவுகள் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகவும் புத்தளம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் A.O.M.நவில் தெரிவித்துள்ளார்.

வங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

தொடர்பான உங்கள் மேலான எண்ணங்களையும் உங்கள் படைப்புகளையும் எமக்கு எழுதி அனுப்புங்கள். அவற்றை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்கக்காத்திருக்கிறோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு

தொ.பே: 0774952242

மின்அஞ்சல்:info@lifelinesrilanka.com

பேசும் படம்



மட்டக்களப்பின் முகாம் ஒன்றில் NRC நிறுவனத்தினால் வழங்கப்படும் மண்ணெண்ணெய்யைப் பெறுவதற்காக காத்திருக்கும் மக்களைப் படத்தில் காணலாம். நகரை விட்டு தூரப்பிரதேசங்களிலேயே முகாம்கள் காணப்படுவதால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இந்த மக்கள் நிறுவனங்களையே அனைத்துத் தேவைகளுக்கும் எதிர்பார்க்க வேண்டியுள்ளது. உணவு சமைப்பதற்கும் இரவில் விளக்கு ஏற்றுவதற்கும் இந்த மண்ணெண்ணெய் பேருதவியாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது .

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

பிரச்சினைகள் ஏற்படும் போது யாரிடம் செல்வது?

இடம்பெயர்வுகள் மக்களை பல்வேறு நெருக்கடி நிலைகளுக்குள் தள்ளிவிடுகின்றது. அடிப்படை வசதிகளை இழந்து நிர் கதி நிலைக்குள் தள்ளப்படும் மக்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுப்பதென்பது சவால்மிக்கதாகவே கருதப்படுகின்றது.

பொன் வண்டு ஆலோசனை சேவையானது சமூகமட்ட ஆலோசனைச் சேவையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வருகின்றது. இது பயிற்றப்பட்ட ஆலோசகர்களை வேலைக்கமர்த்தி, அவர்களால் மக்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் தீர்க்க முடியாத கல்வி, சட்ட ஆவணம், வசிப்பிடம் போன்ற பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலவசமாக ஆலோசனையும் விபரங்களையும் வழங்கி, தனிப்பட்ட முறையில் ஊக்கப் படுத்தி, சேவை கிடைக்கும் வழியையும் காட்டி கிடைக்கக்கூடிய சேவையை பயன் படுத்தவும் செய்கின்றார்கள். 2007ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் இந்த சேவையின் மூலம் இதுவரை 500ற்கும் அதிகமான வழிகாட்டல் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பினர் வாழைச்சேனை அலுவலகத்தில் கள ஒருங்கிணைப்பாளராக பணிபுரியும் தயாநிதி புஸ்பமேரி தமது அமைப்பு மக்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் தொடர்பு படுத்தல் களையும் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

தம்மை நாடிவரும் மக்களுக்குள்ள பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை தீர்பதற்கு உதவக் கூடிய அமைப்புகளுடன் அந்த மக்களை தொடர்பு படுத்துவதே பொன் வண்டு அமைப்பின் பிரதான இலக்கு என்றும் இதன் மூலம் பெருமளவான மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளதாகவும் தெரிவித்தார். பொன் வண்டு அமைப்பானது அங்கவீனமானவர்கள் பலர் தமக்கான உதவிகளை பெறுவதற்கு பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளதாகவும் அதே சமயம் அடிப்படை ஆவணங்களை தவறவிட்டவர்கள் அவற்றை மீளப் பெறுவதற்கான ஆலோசனைகளையும் பெருமளவில் வழங்கியுள்ளதாகவும் தயாநிதி கூறினார்.



பொன்வண்டு ஆலோசனை சேவையின் ஆலோசகர்கள் பொதுமக்களோடு கலந்துரையாடுகின்றனர்.

பொன்வண்டு ஆலோசனை சேவையில் உள்ள ஆலோசகர்கள் பொது மக்களுக்கு பின்வரும் வழிகளில் ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றனர்

✱ தமது காரியாலயத்தில் அல்லது உங்கள் வீட்டில் உங்களைச் சந்திப்பதன் மூலம் உங்கள் பிரச்சினை(கள்)யை அல்லது வேண்டுகோளை தம்மிடம் கூறுவதற்கு வழிவகுப்பர்.

✱ உங்கள் பிரச்சினைக்கு எந்த அரச அலுவலகத்தின் மூலம் அல்லது நிறுவனங்களிடம் செல்வதன் மூலம் உதவி பெற முடியும் என்பது குறித்து ஆலோ சனை வழங்குவார்கள்.

✱ தேவை ஏற்படும் பட்சத்தில் உங்களது வேண்டுகோள் அல்லது பிரச்சினை (கள்) யை சம்பந்தப்பட்ட அலுவலகரிடம் விளக்குவதற்கு உங்களுக்கு உதவி செய்வார்கள். அத்துடன் தேவைப்படும் படிவங்களை நீங்கள் பூர்த்தி செய்வதற்கான ஒத்துழைப்பையும் அவர்கள் வழங்குவார்கள்.

✱ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொலைபேசி மூலம் உரையாடுவோ அல்லது அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கோ உங்களுக்கு இவர்கள் உதவி வழங்குவார்கள்

✱ நீங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கான ஒத்துழைப்பை இவர்களிடம் இருந்து நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்

இதுபோன்ற ஒத்துழைப்புகள் தேவைப்படுமாயின் நீங்கள் பின்வரும் முகவரிகளில் அல்லது தொலைபேசி இலக்கங்கள் மூலமாக பொன்வண்டு ஆலோசனை சேவையினை தொடர்பு கொள்ள முடியும்.

பொன்வண்டு ஆலோசனை சேவை
பொன்வண்டு ஒழுங்கை,
வாழைச்சேனை.

(பொன்வண்டு ஒழுங்கை பிரதான வீதிக்கப்பால் பிரதேச செயலாளர் காரியாலயத்துக்கு அருகில் உள்ளது)

தொலைபேசி இல 065 2257761

பொன்வண்டு ஆலோசனை சேவை
71, வாவிக்கரை வீதி 01
மட்டக்களப்பு
தொலைபேசி இல 065 2225940

சாவரம்

யுத்தம் வளர்ச்சியடைந்த சமூகத்தின் அடையாளம் அல்ல. எனினும் இன்று எமது செவிகளில் யுத்தம் பற்றிய செய்திகள் கேட்டுக்கொண்டே இருக்கிறது. வடக்குபகுதிகளில் இடம்பெற்றுக்கொண்டுள்ள யுத்தம் மக்கள் மத்தியில் எப்படியான உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பில் வாழும் சில பொதுமக்களை சந்தித்து வடக்கு பகுதிகளில் இடம் பெறும் யுத்தத்தை எப்படி உணருகிறீர்கள் எனக் கேட்டப்போது அவர்களிடமிருந்து வெளிப்பட்ட கருத்துக்கள் இவை.



நபர் 1: பொருளாதார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் யுத்தம் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அடிப்படை வசதிகளற்ற நிலையையும் அகதிகள் என்ற நிலையையும் உருவாக்கியிருக்கிறது. இறுதியாக ஒரு ஏழ்மை வாழ்வைத்தான் ஏற் படுத்தியிருக்கிறது.

நபர் 2: ஒரு தொழிலாளியாக இருந்தால் அவரால் அத்தொழிலைத் தொடர முடியாத நிலை ஏற்படும்போது அவரின் பொருளாதார நிலை பாதிப்படையும். பிள்ளைகள் இருந்தால் பிள்ளைகளின் கல்வி பாதிப்படையும். குடும்பத்தைக்கொண்டு நடத்த முடியாத நிலமை தோன்றும். யுத்தம் நடைபெறுகின்ற பகுதிகளில் விரைவில் மக்கள் குடியேறக்கூடிய நிலமை உருவாக வேண்டும்.

நபர் 3: இடம்பெயர்கின்ற மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு மருந்துத் தட்டுப்பாடு குடிநீர் தட்டுப்பாடு இருப்பிட வசதிகள் இல்லை என்பதை செய்தித்தாள்கள் மூலமாக அறிந்து கொள்கிறோம்.

நபர் 4: தமிழர் சிங்களவர் முஸ்லிம்கள் என்றில்லாமல் எல்லோரும் மனிதர்கள் என்று நினைத்தால் நல்லது. உண்மையில் எமக்குக் கவலையாக இருக்கின்றது. யுத்தம் நின்றால் எமது எதிர்கால சந்தியாவது சந்தோசமாக இருப்பார்கள் அல்லவா?

நபர் 5: என்னுடைய தம்பி ஒருவர் அங்கிருக்கின்றார். ஒரு நாள் வேலைக்குச் சென்றால் நான்கு நாட்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது என்றும் சோதனைச் சாவடிகளில் கூட கஸ்டப்படக்கூடிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

வாழ்வின் வர்ணங்கள்



சம்பூரை சொந்த இடமாகக்கொண்ட ராஜேஸ்வரி பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள குருக்கள் மடம் நலன்புரி நிலையத்தில் வசிக்கிறார். இடம்பெயர்ந்து வந்து இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையில் நலன்புரி நிலைய வாழ்க்கை பற்றியும், தனது எதிர்பார்ப்புகள் பற்றியும் வாழ்வின் வர்ணங்களுக்காக எம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

'பிரச்சினையின் காரணமாக ஒவ்வொரு முகாமாகச் சென்று 5ஆவது முகாமாக வாகரைக்கு வந்து பின்னர் காட்டு வழியாக செட்டிபாளையம் சென்று அதன் பின்னர் குருக்கள் மடம் வந்து தற்காலிகக் கொட்டிலில் எனது மூன்று குழந்தைகள் மற்றும் கணவருடன் கவலையுடனும் கண்ணீருடனும் சோகத்துடனும் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். தொடர்ந்தும் இந்தக் கொட்டில் வாழ்க்கையை வாழ்வதைவிட எங்கள் ஊரில் சொந்த மண்ணில் ஒரு கொட்டில் அமைத்துக் கொடுத்தால் நாங்கள் சந்தோசமாக வாழ்வோம். யாரிடம் எங்கள் சோகங்களைக் கூற முடியும்? கடவுளிடம் மட்டும்தான் கூற வேண்டியுள்ளது. கனவில்கூட எங்களுடைய வீட்டைத் தான் காண்கின்றோம். எப்போது சொந்த ஊருக்குச் சென்று பயிர்செய்து வாழ்வோம் என்ற கவலையுடன் இருக்கின்றோம். தொழில்வாய்ப்பில்லாத காரணத்தால் பிள்ளைகளைப் பராமரிக்க முடியவில்லை. இந்த வாழ்க்கை எமக்கு சரிவராது. எங்கள் ஊரில் எல்லோரும் ஒற்றுமையாகவும் நிம்மதியாகவும் திரும்ப வாழவேண்டும் என்றுதான் கடவுளிடம் பிரார்த்திக்கின்றோம்.'

மரபுசாராத தொழில்களில் பெண்கள்



WUSC உதவியுடன் மட்டக்களப்பு, கல்லாறு YMCA யில் காய்ச்சி ஒட்டுநர் பயிற்சி பெறும் பெண்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு ஆண், பெண் என இருபாலரும் பங்களிப்பு செய்வதன் மூலமே அபிவிருத்தியைக் காண முடியும். இலங்கையில் மரபு சாராத தொழில்களில் பெண்கள் ஈடுபடும்போது அவற்றை சமூகம், தொழில் வழங்குநர்கள் அங்கீகரிக்க வேண்டும். அங்கீகாரம் குறையும் போது பெண்கள் உழைக்கும் வருமானத்தில் பாரிய ஏற்றத்தாழ்வு காணப்படும் என WUSC என அழைக்கப்படும் கனேடிய உலகப் பல்கலைக்கழகத்தின் கிழக்கு பிராந்திய வேலைவாய்ப்பு திட்ட உத்தியோகத்தர் பிரமியா கிருபநாயகம் தெரிவித்தார். மாதாந்தம் ஒரு பெண் தான் பயிற்றப்பட்ட தொழில்துறையில் அண்ணளவாக 3826 ரூபா பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அதே தொழிலில் 8068 ரூபா ஓர் ஆணால் சம்பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆண்களினால் மட்டும் செய்யக்கூடிய தொழில்கள் என கருதுவனவற்றைப் பெண்கள் செய்யும்போது அவற்றை மரபு சாராத தொழில்கள் என்பர். WUSC அமைப்பினால் கடந்த நான்கு வருடத்தில் 735 பெண்களுக்கு இத்தகைய துறைகளில் பயிற்சியும் வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

மேசன் பயிற்சி, தச்சுப் பயிற்சி, அலுமினியம் பொருத்துநர், காய்ச்சி ஒட்டுநர், நீர்க்குழாய் பொருத்துநர், மின் இணைப்பாளர் கட்டட அலங்காரப்

ஆண்களினால் மட்டும் செய்யக்கூடிய தொழில்கள் என கருதுபவற்றைப் பெண்கள் செய்யும் போது அவற்றை மரபு சாராத தொழில்கள் என்பர்

பொருட்கள், சிறு மின் உபகரணங்கள் திருத்துதல், தற்போது கணனி தொடர்பான பயிற்சிகளையும் தமது நிறுவனத்தினால் வழங்கி வருவதாக பிரமியா தெரிவித்தார்.

மரபு சாராத இத்தொழில்களில் ஊதிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதற்கான காரணத்தையும் இலங்கையின் அபிவிருத்தியில் பெண்களை பங்களிப்பு செய்ய வைப்பதுமே இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான காரணமென WUSC அமைப்பின் இயலுமை மேம்படுத்தலுக்கான திருகோணமலை நிகழ்ச்சித்திட்ட அதிகாரி மணிவண்ணன் விபரிக்கையில், தொழில் வழங்குநர்கள் தமது நிலையங்களில் பெண்களை சேர்த்துக்கொள்வதில்லை. பயிற்சியின் பின்னர் அவர்கள் சமூகத்திற்கு செல்லுகின்றபோது அதனை உடனடியாக பெற்றோர் ஏற்றுக்கொள்வதில்லை. வடகிழக்குப் பகுதிகளில் நிலவும் சூழ்நிலை காரணமாக அவர்கள் பட்டறைகளை ஏற்படுத்துவதில் நீண்டகால சிக்கல் நிலை இருந்து வருகிறது. அதே வேளை வங்கிக் கடன் பெறுவதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றது என கூறினார்.

சமூக மட்டத்தில் மரபு சாராத தொழில்களுக்கு பெண்கள் செல்வதன் முக்கியத்துவம் குறித்து மேற்கொண்டுள்ள விழிப்புணர்வு நடவடிக்கை குறித்து சர்வோதயா அமைப்பின் திருகோணமலை மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் திட்ட இணைப்பாளர் ஜெனிற்றா கூறுகையில் தெரு நாடகங்கள் மற்றும் பெனர் அமைத்தல் மூலம் தெளிவுபடுத்தி வருகின்றோம். ஏற்கனவே பயிற்சியை முடித்து தற்போது சுயதொழிலில் ஈடுபட்டு வரும் பெண்களின் கதைகளை புகைப்படங்கள், வீடியோக்கள் மூலமாக மற்றவர்களுக்கு முன்னுதாரணம் காட்டி வருகின்றோம். இதன் மூலம் சமூகத்தில் இருப்பவர்கள் பெண்களால் எல்லாம் முடியும் என்பதை விளங்கிக் கொள்வார்கள் என்றார்.

பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், இன்னல்கள் என்பவற்றை சமூகம் அறிவதன் மூலம், அவர்கள் மீதான தேவையற்ற சமூக கட்டுப்பாடுகளை இல்லாமல் செய்வதன் மூலம் பெண்களின் வருமானமும் வாழ்வும் முன்னேறும்.

பெண்களுக்கு இலகுவாக செய்து முடிக்கக்கூடிய வேலைகளைக் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். அதனால் பெண்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது. பெண்களால் சில இயற்கையான காரணங்கள் நிமித்தம் அனைத்து நாட்களும் வேலை செய்ய முடியாத நிலை ஏற்படும். அதே நேரம் ஆண்கள் உற்பத்தி செய்யும் அதே வேகத்தில் அவர்கள் உற்பத்தி செய்வது குறைவாக இருக்கிறது என்று பிரம்மியா கூறினார்.

தொழில் வழங்குநர்கள் பயிற்சி பெற்ற பெண்களை அவர்களது நிறுவனத்தில் உள்வாங்குவதை இலகுபடுத்தவும், அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து ஜெனிற்றா தெரிவிக்கையில், பயிற்சிப் பட்டறையில் பெண்கள் திருத்துதல் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை வீடியோக்கள் மூலமாக தொழில் வழங்குநர்களுக்கு தாங்கள் காட்டுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அதன் மூலம் அவர்களது மனதில் மாற்றங்கள் ஏற்படும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

வெறுமனே கூலித்தொழில் செய்வதும் அடுப்பங்கரையில் நேரத்தை செலவழிப்பதையும் விடுத்து பெண்கள் இத்தகைய மரபுசாரா தொழில்களில் ஈடுபடுவார்களேயாயின் அவர்களது வாழ்க்கையும் குடும்பமும் நாடும் வளம்பெறும்.



கட்டட அலங்கார பயிற்சி பெற்றபின் வெளியிடத்தில் தொழில்புரியும் பெண்.

தகவல் பெட்டி

உங்களுக்குத் தெரியுமா?

நீரைக் கொதிக்க வைக்காமல் அருந்துவதன் மூலம் பல நோய்கள் உங்களைத் தாக்கும். மட்டக்களப்பு மாவட்ட பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியக்கலாநிதி சதுர்முகம் இயற்கையாகக் கிடைக்கும் நீரை, உடலைப் பாதிக்காத வகையில் தயார்படுத்தும் வகையை விளக்குகையில், 'வயிற்றுளைவு, வாந்திபேதி, டைபொய்ட், ஹெபடைடிஸ் போன்ற நோய்கள் வரக்கூடிய தன்மை காணப்படும். மீள்குடியேற்ற பகுதிகளில் விறகுக்கு பஞ்சம் இருக்காது.

ஆகவே கொதித்தாறிய நீரைப் பருகக்கூடிய வசதி காணப்படுகிறது. குளோரினிட்ட குடிநீரைத்தான் கொடுக்கின்றார்கள். நீரை வடிகட்டிப் பருகும் முறைகளும் காணப்படுகின்றது. நீரை உபயோகிக்கும்போது மிக சிரத்தையுடன் உபயோகியுங்கள் என்றார்.



மீண்டும் மீண்டும் இடம்பெயரும் கிளிநொச்சி மக்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையால் அதிகமான மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது. இதில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றன.

உலக உணவுத் திட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதிய நிலைவரத்தின் படி கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 27, 794 குடும்பங்களைச் சேர்ந்த 105,315 பேருக்கு உலர் உணவு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகனிடம் இடம்பெயர்வுகள் குறித்து கேட்ட போது ஏறத்தாழ 20,000 குடும்பங்கள் வரை கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ளதாக கூறினார்.

மன்னார் மாவட்டத்திலிருந்து 5000 குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 6000 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளான முளங்காவில், ஜெயபுரம், அக்கராயன், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், ஸ்கந்தபுரம் போன்ற பகுதிகளிலிருந்தும் மக்கள் தற்போது இடம்பெயர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன்

யேற்ற அமைச்சின் அனுசரணையுடன் மேற்கொண்டு வருவதாக அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் தற்போது நடைதாபிமான செயல்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது

முதல் கட்டமாக பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை 500 குடும்பங்கள் வீதம் இரண்டு பகுதிகளில் குடியமர்த்துவதற்கும் ஏனையவர்களை வேறு சில பகுதிகளில் குடியமர்த்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயரும் மக்களின் அன்றாட தேவைகளான சுகாதார வசதிகள், நீர் விநியோக நடவடிக்கைகள் என்பனவற்றை மீள்குடி

இடம்பெயர்ந்துள்ள மக்களை குடியமர்த்துவதற்கு உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக இடங்களை தெரிவு செய்யும் பணியில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் செயலகம் ஈடுபட்டுள்ளதாகவும் மக்கள் அவ்வாறு தெரிவு செய்யப்படும் பகுதிகளில் குடியேறுவதன் மூலம் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடம்பெயர்வுகளின் போது மக்கள் மர நிழல்களில் தங்க வேண்டிய நெருக்கடி நிலைகள் காணப்பட்டதாகவும் எனினும் பின்னர் அவர்களை பாடசாலைகளில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கமும் ஏனைய உதவி அமைப்புகளும் மேற்கொண்டதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் நடைபெற்ற மனிபெற்று வருகின்றது. இடம்பெயர்ந்துள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ள போதிலும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான பாடசாலைகள் கிளிநொச்சிக்கு அண்மித்த பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்டு அங்கு அவர்கள் பரீட்சைகளில் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கான கல்வி செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு மேலதிகமாக தேவைப்படும் வசதிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபையும் ஏனைய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வந்துள்ளன.

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி செயல்பாடுகளுக்கான தேவைகள் குறித்து தமக்கு அறியத்தருமாறு இந்த அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

எனினும் இடம்பெயர்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் மாணவர்களின் தேவைகள் குறித்து உறுதியான தகவல்களை வழங்க முடியாத நிலை காணப்படுவதாகவும் இதன் காரணமாக அந்த நிறுவனங்களுக்கு தேவைப்படும் தகவல்களை வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இடம்பெயரும் மக்களின் சுகாதார நலன்கள் பேணப்பட வேண்டியது இன்றியமையாதது. மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் இலகுவில் தொற்று நோய்கள் பரவும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. மக்கள் அசுத்தமான நீரை அருந்துவதன் மூலம் அதிகளவில் பாதிக்கப்படக் கூடிய அபாய நிலைகளும் ஏற்பட்டுள்ளன.

OXFAM இடம்பெயரும் மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்வதற்கும் அவர்களுக்கு தேவையான தற்காலிக மலசலகூடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களை குடியமர்த்துவதற்கு உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக இடங்களை தெரிவு செய்யும் பணியில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் செயலகம் ஈடுபட்டுள்ளதாகவும் மக்கள் அவ்வாறு தெரிவு செய்யப்படும் பகுதிகளில் குடியேறுவதன் மூலம் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

தமக்கு ஏற்புடையதான இடங்களில் மக்கள் தற்காலிக வதிவிடங்களை அமைத்து குடியேறுவதன் மூலம் நிர்வாக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் அவற்றை தவிர்த்து அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்படும் இடங்களில் குடியேறுவதன் மூலம் பல்வேறு அசௌகரியங்களை தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்குப்பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு பெண்கள் உரிமைகள் குறித்து எடுத்துக் கூறும் வகையில் 'வார்த்தைக் கணை' குறுநாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

வார்த்தைக் கணை



மீண்டும் வாழ்வோம் நிகழ்சியில் வாராவாரம் உங்கள் கதைகள் என்ற குறுநாடகத் தொடர் ஒலிபரப்பாகி வருகின்றமை யாவரும் அறிந்த விடயமே. சமூகத்திற்கு தேவையான பல முக்கிய மான விடயங்களை நாடக வடிவில் தொகுத்து மக்களுக்கு இலகுவாக சென்றடையக் கூடிய வகையில் ஒலிபரப்புகின்றோம். இந்த நிகழ்சியில் பெண்கள் உரிமைகள் தொடர்பான பல நாடகங்கள் ஒலிபரப்பாகியுள்ளன.

பெண்களை காயப்படுத்தும் பல விடயங்கள் இந்த சமூகத்தில் நடந்த வண்ணமே தான் உள்ளன. சீதனப் பிரச்சினைகள், சாதிப் பிரச்சினைகள், தொழில் ரீதியாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இவ்வாறு பெண்கள் சமூகத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பல்வேறான பிரச்சினைகளை எதிர் நோக்குகிறார்கள்.

அந்த வகையில் வார்த்தைப் பிரயோகங்களால் பெண்கள் அடையும் மனத்தாக்கங்கள் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

ஒருவரை அடித்து துன்புறுத்துவதை விடவும் கொடுமையானது வாய் வார்த்தைகளால் துன்புறுத்துவது. அதிலும் பெண்களை தூற்றுவதற்கென்றே அகராதியில் அர்த்தமில்லாத பல வார்த்தைகள் சமூகத்தில் புழக்கத்தில் இருந்து வருகிறது. திருமணம் முடித்து கணவனை இழந்தவளை விதவை என்றும், திருமணம் முடித்து கணவனை பிரிந்து வாழ்ந்தால் வாழாவெட்டி என்றும், குழந்தைப் பேறு இல்லாத வளை மலடி என்றும், பணத்திற்காக உடலை விற்பவளை விலைமாது, விபச்சாரி என்றும், பெண்களை மட்டுமே குறை சொல்லுவதற்கு பல வார்த்தைகள்.

ஆண் பெண் இருவரையும் கொண்ட இந்த சமூகத்தில் பெண்களை மட்டும் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களால் காயப்படுத்துவதற்கான காரணம் தெரியவில்லை. மனைவியை இழந்தவனை தபுதாரன் என்று கூற வேண்டும், குழந்தைப் பேறு இல்லாதவனை மலடன் என்று கூற வேண்டும்.

இந்தச் சொற்கள் எல்லாம் அகராதியோடு மட்டுமே நின்று விடுகின்றன. சமூகத்தில் மக்களின் புழக்கத்தில் இல்லை. ஆனால் இதில் வருத்தத்திற்குரிய விடயம் என்னவென்றால் பெண்கள் தான் பெண்களை அதிகமாக காயப்படுத்துகிறார்கள். இந்த வார்த்தைகளை அதிகமாக பாவிப்பவர்கள் பெண்கள் தான்.

பாரதூரமான ஒரு சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணை அவளைச்சுற்றி உள்ளவர்கள் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களால் நோகடிக்கும்போது, அவளுக்கு மனதில் பெரிய தாக்கம் ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் பெற்றவர்களும் உறவினர்களும் கூட இயலாமையின் காரணத்தால் மனக்காயங்கள் ஏற்படுமளவிற்கு நடந்து கொள்வார்கள்.

இந்த நாடகத்தில் வரும் மாலினி குழந்தைப் பேறு இல்லாமையால் கணவனால் புறக்கணிக்கப்பட்டு தாயுடன் வாழ்கிறாள். சமூகத்தின் பழிச் சொல்லுக்கு தனது மகள் ஆளாகி இருப்பதை நினைத்து இயலாமையினாலும், மனவேதனையாலும் தாயே மகளை வார்த்தைகளால் நோகடிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

இவ்வாறான நிலைமையை இன்று சமூகத்தில் பல பெண்கள் எதிர்கொள்கிறார்கள். வார்த்தைப் பிரயோகங்களால் பெண்கள் நோகடிக்கப்படும் விடயம் தொடர்பானதாகவே வார்த்தைக் கணை குறு நாடகம் அமைந்தது.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS

USAID FROM THE AMERICAN PEOPLE

மீண்டும் வாழ்வோம் நிகழ்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.